# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.



# ஆசௌச காண்டம்.

1.0 ஞாதிகள்

1.1 ஞாதிகள் என்பது இரு வகைப்படும். முதலாவது ஸபிண்டர்கள். அதாவது பத்துநாள் தாயாதர்கள். 2-வது ஸமானோதகர்கள். அதாவது 3 நாள் தாயாதர்கள். அவர்களுள் ஸபிண்டர்கள் என்பது கூடஸ்தனிலிருந்து ஏழு தலைமுறை வரையில் உள்ளவர்கள். ஸமானோதகர்கள் என்பது எட்டாவது தலைமுறை முதல் 14 தலைமுறை வரையிலுள்ளவர்கள்.

1.2 ஒருவனுக்கு பிதா, பிதாமஹன், ப்ரபிதாமஹன், புத்ரன், பௌத்ரன், ப்ரபௌத்ரன் இவனுட்பட ஏழு தலைமுறை (ஆகும்).

1.3 தகப்பன் பிள்ளைகளும், அண்ணன் தம்பிகளும் தாயாதர்களே.

2.0 பிறப்புத் தீட்டு

2.1 நாலாவது மாஸத்தில் கர்பத்தின் விச்சித்தி (சிதைவு) உண்டானால் பிதாவுக்கு ஸ்நாநம், மாதாவுக்கு 4-நாள் தீட்டு.

2.2 5-6 வது மாஸங்களில் விச்சித்தி உண்டானால் பிதாவுக்கும் ஸபிண்டர்களுக்கும் ஸநானம். பிண்டம்போல் விழுந்தால் இவர்களுக்கு 3 நாள் தீட்டு. தாய்க்கு 5-வது மாஸத்திலானால் 5 நாளும், 6-வது மாஸத்திலானால் 6 நாளும் தீட்டு.

2.3 7-வது மாஸம் முதல் பிறந்தது பிள்ளையானால் மாதா பிதாக்களுக்கும், ஸபிண்டர்களுக்கும் பத்துநாள் தீட்டு. (எட்டாம் தலைமுறை) ஸமானோதகர்களுக்கு 3- நாள் தீட்டு.

2.4 ஆண் குழந்தையானால் 30 தினங்களுக்குப் பிறகும், பெண் குழுந்தையானால் 40 தினங்களுக்குப் பிறகும் மாதா (குழந்தை பெற்றவள்) வுக்கு பாண்ட ஸ்பர்ச (சமையல் பாத்திரங்களைத் தொட) யோக்யதை உண்டாகும்.

2.5 பெண் குழந்தை பிறந்தால் அதன் பின்னோதரன் உட்பட ஸஹோதரன், தகப்பன், பின்னோதரன் உள்பட சிறிய தகப்பன், பெரிய தகப்பன், பின்னோதரன் அல்லாத சிறிய தகப்பன், பெரிய தகப்பன் பிள்ளைகள், பிதாமஹன், அந்தப் பிதாமஹனுடைய பின்னோதரன் உள்பட ஸஹோதரர்கள் இவர்களுக்குப் பத்துநாள் தீட்டு.

2.6 (பெண் குழந்தை பிறந்தால்) பின்னோதரன், சிறிய தகப்பன், பெரிய தகப்பன்

R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து
கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.



Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

asoucha-kandam.indd 1 3/14/2011 7:11:40 PM

பிள்ளைகளுக்காவது, பிதாமஹனுடைய ஸஹோதரர்களின் பிள்ளைகளுக்காவது, சிசு (குழந்தை)வின் ஸஹோாரதரனுடைய பிள்ளைகளுக்காவது தீட்டில்லை.

2.7 பெண்கள், தாய் தகப்பன் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களுடைய பொருள் செலவினால் வேறு இடத்தில் (மருத்துவ மனைகளில்) ப்ரஸவித்தாலும், (பெண்ணின்) தாய் தகப்பன்களுக்கு 3 நாள் தீட்டு.

2.8 ஒரு பெண் தன் ஸஹோதரன், சிறிய தகப்பன், பெரிய தகப்பன், அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் ப்ரஸவித்தாலும், அவர்களின் பொருள் செலவினால் வேறு எந்தவிடங்களில் ப்ரஸவித்தாலும், (மேற்சொன்னவர்களுக்கு) 1 நாள் தீட்டு.

2.9 உபநயனம் இல்லாதவனுக்கும் (ஆகாதவனுக்கும்), ப்ரஹ்மசாரிக்கும் தீட்டில்லை.

2.10 பிறப்புத் தீட்டில் அதிக்ராந்த ஆசௌசம் (தீட்டு முடிந்த பிறகு கேள்விப்பட்டால் அதன் பிறகு தீட்டு காக்கவேண்டிய அவசியம்) இல்லை. ஆனால் பிதாவுக்கு (குழந்தையின் தந்தை) மட்டில் ஸ்நாநம் உண்டு.

2.11 ஜனனத்தில் பிதாவுக்கு 2 நாழிகை சுத்தி. பிதா வெகு தூரத்தில் இருந்தால் ஒரு நாள் சுத்தி (சுத்தம்). அல்ப தூரத்தில் இருந்தால் ஒரு பகல் சுத்தி.

3.0 இறப்புத் தீட்டு -

3.1 10 - நாள் தீட்டு

3.1.1 தசராத்ர ஜ்ஞாதிகளின் மரணத்தில் 10 நாள் தீட்டு.

3.1.2 பிறந்து பத்துநாள்களுக்கு மேல், புருஷ சிசுவின் (ஆண் குழந்தையின்) மரணத்திலும், விவாஹம் வரையில் பெண் குழந்தையின் மரணத்திலும், தாய், தந்தை, பின்னோதர ப்ராதா, ஸஹோதர ப்ராதா இவர்களுக்கு 10 நாள் தீட்டு.

3.1.3 7 வயதிற்குட்பட்டு உபநயனமான தசராத்ர ஜ்ஞாதிகளின் பிள்ளைகள் இறந்தால் 10 நாள் தீட்டு.

3.1.4 7 வயது முதல் உபநயனமானாலும் ஆகாமலிருந்தாலும் புருஷப்ரஜை (ஆண்) மரணத்தில் 10 நாள் தீட்டு.

3.2 புருஷர்களுக்கு 3 நாள் தீட்டு.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

asoucha-kandam.indd 2 3/14/2011 7:11:40 PM

3.2.1 மாதாமஹன்

3.2.2 மாதாமஹீ

3.2.3 அம்மான்

3.2.4 அம்மாமி

3.2.5 மாமனார்

3.2.6 மாமியார்

3.2.7 தாயின் ஸஹோதரி

3.2.8 தகப்பனின் ஸஹோதரி

3.2.9 உபநயனமான மருமான்

3.2.10 உபநயனமான தௌஹித்ரன்

3.2.11 உபநயனமான ஸமானோதகன்

3.2.12 விவாஹமான பெண்

3.2.13 ஸஹோதரி

3.2.14 ஜனகமாதா (ஸ்வீகாரம் போனவனுக்கு)

3.2.15 ஜனகபிதா (ஸ்வீகாரம் போனவனுக்கு)

3.2.16 தத்தனான (ஸ்வீகாரம் வழங்கப்பட்ட) பிள்ளை

3.2.17 25-வது மாஸம் முதல் 6 வருஷம் முடிய அநுபநீதனான தசராத்ர ஜ்ஞாதிகளின் பிள்ளை.

3.2.18 24 மாஸங்களுக்கு மேற்பட்டு சௌளமாகிவிட்ட ஜ்ஞாதிகளின் பிள்ளை

3.2.19 7-வது வருஷம் முதல் விவாஹம் வரையில் தசராத்ர ஜ்ஞாதிகளின் பெண்.

(பெண் குழந்தை விஷயத்தில் 3-தலைமுறை வரையில் தான் ஸ ாபிண்ட்யம் என்பதை கவனிக்கவும்).

3.2.20 ஸமானோதகர்களுக்கு - 1) ஏழு வயதிற்குட்பட்டு உபநயனமான ஜ்ஞாதிகளின் பிள்ளை. 2) ஏழு வயது முதல் உபநயனமானாலும் ஆகாவிட்டாலும் ஜ்ஞாதிகளின் பிள்ளை. (மேற் சொன்ன அனைத்து உறவினர் மரணத்திலும் 3 நாள் தீட்டு).


R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து
கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/



asoucha-kandam.indd 3 3/14/2011 7:11:40 PM

3.3.0 புருஷர்களுக்குப் பக்ஷிணித் தீட்டு

குறிப்பு:- பக்ஷிணி என்பது, இரண்டு இரவும் ஒரு பகலும், அல்லது ஒரு இரவும் இரண்டு பகலும் கொண்ட காலம்.

3.3.1 அத்தையின் பிள்ளை, பெண்.

3.3.2 அம்மானுடைய (மாமா) பிள்ளை, பெண்.

3.3.3 தாயின் ஸஹோதரியின் பிள்ளை, பெண்.

3.3.4 ஸஹோதரிகளின் பெண்.

(ஸஹோதரியின் பிள்ளை 3 நாள் தீட்டில் வருவதைக் கவனிக்கவும்)

3.3.5 ஸஹோதரனுடைய கல்யாணமான பெண்

3.3.6 பித்ருவ்யனுடைய (அப்பாவின் ஸஹோதரர்கள்) பெண்.

3.3.7 பௌத்ரீ (பிள்ளையின் பெண்)

3.3.8 தௌஹித்ரீ (பெண்ணின் பெண்)

3.3.9 3 வயதுக்கு மேற்பட்ட உபநயனமாகாத மருமான், தௌஹித்ரன்.

மருமான் - ஸஹோதரியின் பிள்ளை. தௌஹித்ரன் - பெண்ணின் பிள்ளை.

மேற்கண்டவர்களின் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம் (தீட்டு).

குறிப்பு:- சூர்ய உதயம் முதல் சூர்ய உதயம் வரை ஒரு நாளாகக் கணக்குச் செய்பவர்கள் இரவில் எப்போது இறந்தாலும், இதை ஒரு காலமாக (ஒரு இரவாக) வைத்துக் கொள்ள வேண்டியது.

ஆனால் ராத்திரி 18$\frac{3}{4}$ நாழிகைக்கு மேல் (அதாவது சூரிய அஸ்தமன நேரத்திலருந்து 7$\frac{1}{2}$ மணி நேரம் - சுமார் நள்ளிரவு 1.30 மணிக்குப் பிறகு) நேரிடுவது மறுநாளில் சேர்த்துக் கணக்குச் செய்பவர்கள் (இதுவே தமிழக வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்) மறு நாள் (பகல்) கணக்கில் சேர்த்துக் கொண்டு கணக்கிட வேண்டியது.

குறிப்பு:- பெண்கள் மாதவிலக்கு ஆகும் நாள் கணக்கிற்கும்,





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

asoucha-kandam.indd 4 3/14/2011 7:11:40 PM

மரணமானவர்களுக்கு 10ம் நாள் கணக்கிடுவதற்கும் இந்த 2ம் முறையே பின்பற்றப்படுகிறது.

4.0 புருஷர்களுக்கு 1 - நாள் தீட்டு

குறிப்பு:- ஸமானோதர - என்பது ஒரு வயிற்றில் பிறந்த ஸஹோதரர்களை குறிக்கும்.

பின்னோதரன் என்பது சிறிய-பெரிய தகப்பன் பிள்ளைகளைக் குறிக்கும்

4.1 ஸபத்நீ மாதாவின் (மறு தார அம்மா) ஸஹோதரன், ஸஹோதரி, பெண்

4.2 மேற்கண்ட மூவரின் பெண், பிள்ளை.

4.3 மைத்துனன் (மனைவியின் ஸஹோதரன்).

4.4 பின்னோதரர்களான சிறிய தகப்பன், பெரிய தகப்பன், இவர்கனின் பெண்.

4.5 பின்னோதரப்ராதாவின் பெண்.

4.6 பின்னோதர அத்தை.

4.7 மேற்படியாளுடைய (அத்தையுடைய) பெண், பிள்ளை.

4.8 ஸபத்னீமாதா (வேறு அம்மா)வின் தகப்பனார், தாயார்.

4.9 25-வது மாதம் முதல் 6-வது வருடம் வரையில் விவாஹமாஹாத ஜ்ஞாதியின் பெண்.

4.10. ஜநக ப்ராதா (ஸ்வீகாரம் சென்றவனுக்கு பிறந்தவீட்டுச் ஸஹோதரன்).

4.11. ஜநக ஸபிண்டன் (பிறந்த வீட்டைச் சோந்த ஏழு தலைமுறைக்குட்பட்ட ஜ்ஞாதி).

4.12 பத்னீ, அவள் ஸந்ததி இரண்டுமில்லாத விஷயத்தில் மாமனார், மாமியார்.

(அதாவது குழந்தையில்லாமல் இறந்துபோன மனைவியின் தந்தை, தாய்).

4.13 6-மாஸத்திற்கு மேல் 24 மாஸத்திற்குட்பட்ட சௌளமாகாத ஜ்ஞாதியின் பிள்ளை.

5.0 ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவுடன் (கணவனுடன்) ஏற்படும் தீட்டைத் தவிர தனியாக ஏற்படும் தீட்டுகள். கணவனுக்குண்டான தீட்டு அதே அளவு மனைவிக்கு உண்டு. மனைவிக்கு மட்டுமான தீட்டு கணவனுக்கு இல்லை.

5.1.0 ஸ்த்ரீகளுக்கு மட்டுமான 3 நாள் தீட்டுகள்.

5.1.1 உபநயனமான ஸோதரன். (4.3 படி கணவனுக்கு 1 நாள் தீட்டு)

5.1.2 உபநயனமான மருமான்

5.1.3 உபநயனமான ஸோதரியின் பிள்ளை.

5.1.4 ஸபத்னீ மாதா (மறுதார அம்மா)


R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.



Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/



asoucha-kandam.indd 5 3/14/2011 7:11:40 PM

5.2.0 ஸ்த்ரீகளுக்கு பக்ஷிண்யாசௌசம் (90 நாழிகை தீட்டு)

5.2.1 பித்ருவ்யன் (அப்பாவின் ஸஹோதரர்)

5.2.2 தாயின் ஸஹோதரி

5.2.3 மாதுலன் (தாயின் ஸஹோதரன்)

5.2.4 அத்தை

5.2.5 மேற்சொன்ன நால்வருடைய பிள்ளை அல்லது பெண்

5.2.6 பிதாமஹன் (அப்பாவின் அப்பா)

5.2.7 பிதாமஹி (அப்பாவின் அம்மா)

5.2.8 மாதாமஹன் (அம்மாவின் அப்பா)

5.2.9 மாதாமஹி (அம்மாவின் அம்மா)

5.2.10 ஸஹோதரி

5.2.11 ஸஹோதரியின் பெண்

5.2.12 மருமாள்

இவர்களின் மரணத்தில் பெண்களுக்கு மட்டும் 90 நாழிகை தீட்டு.

---

அகவிவேசனக்காரர், ஸபத்னீ மாதவின் மரணத்தில் ஸபத்னியினுடைய பெண்ணிற்கு 1 நாளும், ஸபத்னியினுடைய பெண் மரணத்தில் ஸபத்னிக்கு ஒரு நாளும் தீட்டு என சொல்லியிருக்கிறார். அது பிசகு எனில், ஸபத்னியினுடைய பெண் இறந்தால் அந்தப் பெண்ணினுடைய தகப்பனாராகிய தன் பர்தாவுக்கு 3-நாள் தீட்டு இருக்க, இவளுக்கு மட்டில் ஒரு நாள் தீட்டு சொல்லக் காரணமில்லை.

அகபஞ்சஷஷ்டிக்காரர் இவ்விஷயத்தில் 3 நாள் தீட்டுச் சொல்லியிருக்கிறார். இத்யாதி காரணங்களைக் கொண்டு 3-நாள் தீட்டு என்பதுதான் ஸித்தாந்தம்.

---

குறிப்பு:- வரிசை எண் அமைப்பு மற்றும் அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை படிப்பவரின் புரிந்து கொள்ளுதலுக்காக கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மூல புத்தகத்தில் இல்லை. வழக்கத்தில் உள்ள வைதீக கர்மாக்களுக்கு மட்டுமே அடியேனால் மேற்கொண்டு விளக்கம் அளிக்க முடியும். இது ஏன் இப்படிக் கொடுக்கப்பட்டுள்ளது ஏன் இப்படி இருக்கக்கூடாது என்பது போன்ற குதர்க்கமான கேள்விகளுக்கு பதில் அளிக்க இயலாது.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/



asoucha-kandam.indd 6 3/14/2011 7:11:41 PM

5.3.0 ஸ்த்ரீகளுக்கு மட்டும் 1 - நாள் தீட்டு.

5.3.1 ஸபத்னீமாதாவின் புத்ரன், புத்ரீ, பகிநீ, ஸஹோதரன்.

5.3.2 மேற்சொன்ன நால்வரின் பெண்கள் பிள்ளைகள்.

5.3.3 பின்ளோதர பித்ருவ்யன், பின்னோதர அத்தை.

5.3.4. மேற்படி இருவர்களுடைய பெண்கள், பிள்ளைகள்.

5.3.5 ஸபத்னீ மாதாவின் தாய், தகப்பன்.

இவர்கள் மரணத்தில் ஸ்த்ரீகளுக்கு ஒரு நாள் ஆசௌசம்.

குறிப்பு:- இறப்புத் தீட்டுச் சொன்னவர்களில் பிள்ளைகள் பெண்கள் என்று சொல்லியிருப்பதில், பிள்ளைகள் உபநயனமானவர்கள், பெண்கள் கல்யாணம் ஆனவர்கள் என்று அறிந்து கொள்க.

6.0 தீட்டுச் சேர்க்கை.

6.1.0 பிறப்புத் தீட்டில் பிறப்புத் தீட்டு.

6.1.1 3 நாள் தீட்டில் மற்றொரு 3 நாள் தீட்டு வந்தால் அது முன்வந்த தீட்டோடு (அந்த தீட்டு முடியும் தினத்தோடு இந்த தீட்டும்) போய்விடும்.

6.1.2 10-நாள் தீட்டில் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால் அதேபோல் முன்வந்த தீட்டு முடியும் தினத்திலேயே (10 வதுநாள் வந்தாலும்) பின் வந்த தீட்டும் முடிந்துவிடும்.

6.1.3 3 நாள் தீட்டின் மத்தியில் 10 நாள் தீட்டு வந்தாலும், 10 நாள் தீட்டின் மத்தியில் 3 நாள் தீட்டு வந்தாலும் 10 நாள் தீட்டின் முடிவில்தான் தீட்டுப்போகும்.

6.1.4 ஒரு தீட்டின் நடுவில் ஒரு குழந்தை பிறந்தால், அதன், தாய், தகப்பன் இவர்களுக்கு மட்டில் பிறந்தது முதல் 10 நாள் தீட்டு உண்டு.

6.1.5 10 நாள் தீட்டின் 10வது நாள் ராத்திரியில் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால், பிறகு 2 நாளும், 10வது நாள் ராத்திரி முடியும் தருவாயில் அருணோதயத்தில் வந்தால் பிறகு 3 நாள் அதிகத் தீட்டு உண்டு.

6.1.6 10 நாள் தீட்டின் மத்தியில் 3 நாள் தீட்டு எப்போது வந்தாலும், அதற்காக விசேஷ மொன்றும் இல்லை.

6.1.7 ஒருவன் தனக்கு சிசு பிறந்து தீட்டுக்காத்துக்கொண்டிருக்கும்போது 10வது நாள் ராத்திரியில் எப்போதானாலும் வேறு பிறப்புத் தீட்டு வந்தால் அதிகத் தீட்டில்லை.

6.1.8 ஒரு தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது, அத்தீட்டின் ஆரம்ப நாளுக்கு (சில






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

தினங்கள் முன்னமே) ஏற்பட்ட ஒரு தீட்டு பின்னதாகத் (தாமதமாகத்) தெரியவந்தாலும் முன்னால் ஏற்பட்ட தீட்டின் முடிவோடு தற்போது காத்துக் கொண்டிருக்கும் தீட்டும் போய்விடும். அதாவது நடந்த ஸம்பவத்திற்கு முக்கியத்துவமே அன்றி, கேள்விப்பட்ட நாளுக்கு அல்ல.

6.1.9 ஒருவனுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்ததில் ஒன்று முதல் நாளும், மற்றொன்று மறு-நாளுமாக பிறக்கிற விஷயத்தில் (முன் வந்த தீட்டோடு பின் வந்த தீட்டு போய்விடும் என்ற ந்யாயத்தினால்) முதலில் பிறந்த குழந்தையின் காலத்தை ஒட்டி தீட்டு நிவர்த்தி, (க்ஷவரம் செய்து கொள்ளுதலை) அநுஷ்டிக்கவேண்டும்.

ஆனால் தாயருக்கு மட்டில் பின்னாடிப் பிறந்த குழந்தைக்கு 11வது நாளின் முடிவில்தான் தீட்டுப்போகும்.

6.2.0 பிறப்புத் தீட்டும், இறப்புத் தீட்டும்.

6.2.1 பிறப்புத் தீட்டைக் காட்டிலும் இறப்புத் தீட்டு பலமானது. இறப்புத் தீட்டுடன் பிறப்புத் தீட்டு போய்விடும். பிறப்புத் தீட்டுடன் இறப்புத் தீட்டு போகாது.

6.2.2 ஆனால், ஒருவன் தனக்கு குழந்தை பிறந்து தீட்டுக் காத்துக் கொண்டிருக்கும்போது ஜ்ஞாதி (பங்காளி) மரணம் ஏற்பட்டால் அது பிறப்புத் தீட்டோடு போய்விடும்.

இதற்கு ப்ரமாண வசனம்.

जननाशौच मध्येतु ज्ञातीनां मरणेसति।

पूर्वाशौचेन जनकः ज्ञातीनां अपराच्चुचिः॥

ஜநன ஆசௌச மத்தியில் ஜ்ஞாதி மரண ஆசௌசம் ஏற்பட்டால், அது தாய் தகப்பனார்களுக்கு மட்டில் பிறப்புத் தீட்டோடு போய்விடும். மற்றவர்களுக்கு இறப்புத் தீட்டின் முடிவில்தான் சுத்தி.

6.2.3 தாய், தகப்பன், தங்களுக்கு சிசு பிறந்து தீட்டுக் காத்துக்கொண்டிருக்கும்போது அந்த சிசுவானது இறந்தால் இறப்புத் தீட்டு அதிகமில்லை. 10வது நாளில் இறந்தால் 2 நாளும், 11மந் நாள் விடிவதற்கு முன் இறந்தால் 3 நாளும் அதிகத் தீட்டு உண்டு. மற்றவர்களுக்கு அதிகத் தீட்டு கிடையாது.

6.2.4





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, M.Phil, (PhD.)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

asoucha-kandam.indd 8 3/14/2011 7:11:41 PM